# சங்க இலக்கியத்தில் காணப்படும் பண்பாட்டுச் செய்திகள்

பெ.ரேணுகாதேவி
கௌரவ விரிவுரையாளர்
கார்டமம் பிளாண்டர்ஸ் அசோசியேசன் காலேஜ்
போடிநாயக்கனூர்

# பண்பாடு

பண்பாடு என்பது பண்படுத்தல் அல்லது மக்களை பக்குவப்படச் செயதல் என்று பொருள். பண்டைய தமிழ் மக்களின் வாழ்க்கையை, நாகரீகத்தை, ஒழுக்கலாறுகளை அறிவதற்கு உதவுவன பண்டைய இலக்கியங்கள் . அவ்விலக்கியங்களில் விரிச்சி கேட்டல், உன்னம் பார்த்தல், பராய்க்கடன் உரைத்தல், மடலேறுதல், ஏறுதழுவுதல் போன்றவற்றை வெளிப்படுத்தியுள்ளனர்.

# விரிச்சி கேட்டல்



ஒரு காரியத்தை செய்யக் கிளம்பும் முன், அதை அறியாத ஒருவர் பேசும் நற்சொல் காதில் விழுந்தால் நல்லது என்பது பழந்தமிழர் நம்பிக்கை. அவ்வாறு காத்திருத்தல் விரிச்சி கேட்டல் எனப்படும்.

# உன்னம் பார்த்தல்

**உன்ன மரம்** என்பது சங்ககாலத்தில் இருந்த மர வகைகளில் ஒன்று.. இதன் வேர்கள் வலிமை இல்லாதவை. இந்த மரம் நாட்டுக்கு நன்மை வருங்கால் பூத்துக் குலுங்கியும், கேடு வருங்கால் காய்ந்தும் நிற்கும் எனக் கூறப்படுகிறது. பருவ மகளின் நடத்தைகளைத் தாய்மார் உன்னிப்பாகக் கண்காணிப்பதை 'உன்னக் கொள்கை' என்றனர்.

# பராய்க்கடன் உரைத்தல்

ஒருவர் தான் வேண்டியவை நிறைவேறுமானால் இன்னது படைப்பேன் என்று கடவுளரையோ, பிறவற்றையோ வேண்டிக்கோடல் பராய்க்கடன் உரைத்தல் என்பர்.

தலைவி உடன் போக்கு சென்றதை அறிந்த நற்றாய் தன் மகள் தலைவனோடு மீண்டு வரவேண்டும் திருமணம் செய்து பார்க்க வேண்டும். தலைவனும் தலைவியும் திரும்பி வருமாறு நன்னிமித்தமாக கரையும்படி காக்கையிடம் வேண்டுகிறாள். அவ்வாறு கரைந்தால் காக்கைக்கு பலிக்கடன் கொடுப்பதாக கூறுகின்றாள்.

# ஏறுதழுவுதல்



ஏறு தழுவல், மஞ்சு விரட்டு, சல்லிக்கட்டு, அல்லது ஜல்லிக்கட்டு என்பது தமிழர்களின் மரபுவழி விளையாட்டுகளில் ஒன்றாகும். ஏறு என்பது காளை மாட்டைக் குறிக்கும். தலைவியை மணக்க விரும்பும் தலைவன் காளை மாட்டினை அடக்கி தன் வீரத்தை நிலைநாட்ட வேண்டும்.


நன்றி